# <u>பண்ணுருட்டி நகராட்சி</u>

## *<u>மன்ற கூட்ட அழைப்பிதழ்</u>*

**************

பண்ணுருட்டி நகரமன்றத்தின் **சாதாரண கூட்டம் பிலவ வருடம்** தமிழ் மாதம் **மாசி 30**ம் நாள் **14–03–2022 திங்கள் கிழமை நேரம் காலை 10.00** மணிக்கு, நகராட்சி அலுவலகத்திலுள்ள “**பேரறிஞர் அண்ணா மன்ற கூடத்தில்**” நடைபெறவுள்ளது.

அவ்வமயம் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நகரமன்ற தலைவர்,
பண்ணுருட்டி நகராட்சி.

<u>பண்ணுருட்டி நகராட்சி</u>

பண்ணுருட்டி நகராட்சி நகரமன்ற **சாதாரண கூட்டம்** 14–03–2022 –ந் தேதி திங்கள் கிழமை காலை 10.00 மணிக்கு பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் உள்ள **“பேரறிஞர் அண்ணா”** மன்ற கூடத்தில் நடைபெறும் **சாதாரண கூட்டத்திற்கு** நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**நகரமன்ற தலைவர்,**
**பண்ணுருட்டி நகராட்சி.**

# <u>நகரமன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் பொருள்</u>

1. கொரானா காலங்களில் கூட சிறப்பாக அரசை வழி நடத்தி அனைத்து தரப்பு மக்களுக்கும் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குதிகளை நிறைவேற்றியும் ஒட்டுமொத்த தமிழக மக்கள் மனங்களையும் கவர்ந்து 2022–ம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் தலைமையில் அனைத்து மாநகராட்சிகள் , நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளை கைபற்றி அமோக வெற்றி பெற்றதற்கு மாண்புமிகு **தமிழக முதல்வர்** அவர்களுக்கு பண்ணுருட்டி நகரமன்றம் சார்பில் நன்றி கலந்த வணக்கத்தையும், பாராட்டுகளையும் தெரிவித்து கொள்ளப்படுகிறது.

2. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் SDRF நிதியின் கீழ் மதிப்பீடு ரு.180.30 இலட்சத்தில் 2021 வடகிழக்கு பருவ மழையால் பழுதடைந்த சாலைகள் மற்றும் இந்நகராட்சிக்குட்பட்ட திருவதிகை – வடகைலாசம் (Ward–B, Block–16, TS No–105/4) பகுதியில் புதியதாக Urban Health Wellness Centre அமைக்கும் பணிக்கு தமிழ் தினசரி நாளிதழான தினமலர் நாளிதழில் வெளியிடப்பட்டதற்கு SRI VENKATESHWARA AGENCY என்ற நிறுவனத்திடம் இருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரு.16,800 /–யை மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

   <u>அலுவலககுறிப்பு:–</u>

   1. மன்றம் அனுமதிக்கலாம்.
   2. மேற்கண்ட பட்டியலுக்கான தொகையை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

   **(ந.க.எண்.3282/இ1/2021)**

3. பண்ணுருட்டி நகராட்சியின் வருவாய் நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி மற்றும் கல்வி நிதிக்கான 2021–22ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு மற்றும் 2022-23 ஆண்டிற்கான திட்ட மதிப்பீடும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
   **அலுவலக குறிப்பு:-1.** மன்றம் அனுமதிக்கலாம்.
   (கோ. எண்.519/2022/பி1)

4. பண்ணுருட்டி நகராட்சியில் 1.10.2021 முதல் 30.09.2022 வரையிலான காலங்களுக்கு ஒப்பந்த பணிக்காக பிடித்தம் செய்யப்பட்ட GST மற்றும் நகராட்சி மூலம் குத்தகை இனங்களுக்கு பெறப்படும் சேவைக்கட்டணம் (Service Tax) தொகையினை GSTக்கான வலைதளத்தில் பதிவு ஏற்றம் மற்றும் பதிவிறக்கம் செய்யவும் ஒப்பந்ததாரர் GST தொகை ஒப்பந்ததாரர் TIN எண்ணில் பதிவேற்றம் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.75,000/– நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
   **அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

5. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட 691 சாலைகளில் மற்றும் தெருக்களில் கீழ்காணும் விபரப்படி தெருவிளக்குகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1) | குழல் விளக்குகள் | – 1600 |
| 2) | 85 வாட்ஸ் CFL விளக்கு | – 133 |
| 3) | 90 வாட்ஸ் LED விளக்கு | – 70 |
| 4) | 250 வாட்ஸ் SV விளக்கு | – 351 |
| 5) | 250 வாட்ஸ் MH விளக்கு | – 08 |
| | **மொத்தம்** | **– 2162** |

மேற்காணும் தெருவிளக்குகளுக்கு ஒரு வருடத்திற்கான மின் பயன்பாடு கட்டணம் உதிரி பாகங்கள் மற்றும் பணியாளகள் ஊதியத்தடன் ரூ.65.51 இலட்சம் செலவினம் ஏற்படுகிறது. மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களால் 2021–22 சட்டமன்ற பட்ஜெட் கூட்டுத்தொடரில் அறிவிப்பு எண் 12–ன்படி 9 மாநகராட்சிகள் மற்றும் 77 நகராட்சிகளில் 3,11,601 தெருவிளக்குகளை ஆற்றல் சேமிப்புடைய LED விளக்காக மாற்ற அறிவிப்பு மற்றும் நிதி ஆதாரம் தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதி நிறுவனம் மூலம் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளன.

இந்த கொள்கை முடிவில் பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 2162 தெருவிளக்குகளும் உள்ளடக்கம் செய்யப்பட்டுள்ளன. தமிழக அரசின் இந்த ஆற்றில் சேமிப்புக்கான பணியில் இந்நகராட்சியில் உள்ள 2162 தெருவிளக்குகளையும் LED விளக்காக மாற்றும் பணிக்கு நிர்வாக அனுமதி பெறவும் இப்பணிக்கான மதிப்பீடு செலவீனம் ரூ 2,58,37,000/– கான செலவினத்திற்கு TUFIDCO அரசு நிதி நிறுவனத்திடம் மானியமாக பெறுவதற்கும் அரசிற்கு பிரேரணை சமபிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** - 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2) இப்பணிக்கான செலவினத்திற்கு உரிய மதிப்பீடுதொகைக்குரிய நிதி ஆதாரத்தை அரசு நெறிமுறைப்படி TUFIDCO நிறுவனத்திடம் நிதி பெறுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

3) தற்போதுள்ள தெருவிளக்குகளை ஆற்றல் சேமிப்புடன் கூடிய LED விளக்காக மாற்றம் செய்யப்பட்டால் வருடத்திற்கு ரூ:31.96 இலட்சம் நிதி சேமிப்பு இந்நகராட்சிக்கு ஏற்பட வாய்புள்ளதாலும் பராமரிப்புசெலவினம் மிகவும் குறைவானதாக இருக்கும் என்பதாலும் ஆற்றல் மற்றும் நிதி சேமிப்பு கருதி இப்பணிக்கும் அரசிடம் பிரேரணை சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:– 554/இ2/2022)

6. பண்ணுருட்டி நகராட்சிக்கு நமக்கு நாமே திட்டம் 2021–22–ன் வார்டு எண்.22 காமராஜ் தெரு பகுதியில் மழை நீர் வடிகால் மற்றும் சிமெண்ட் சாலை

சீரமைக்கும் பணிக்கு ரூ.5.00/- லட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. மேற்கண்ட பணியை மேற்கொள்ள திருமதி.பிரேமா அவர்கள் நமக்கு நாமே திட்டம் 2021-22-ன் கீழ் பங்குத் தொகையான ரூ.1.65/-க்கு வங்கி வரைவோலை எடுத்து நகராட்சி ஆணையர் அளித்துள்ளார். எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.566/2022/இ1)**

7. பண்ணுருட்டி நகராட்சிக்கு சொந்தமான அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக இருக்கைகள் அமைத்தல் பேருந்துகளின் வருகை மற்றும் புறப்பாட்டுக்கான நேர அட்டவணை மற்றும் இதர அடிப்படை வசதிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.50/- இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- 1.**மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட பணிகளுக்கான செலவினத்தை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4138/2013/அ1)**

8. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-22 நிதியின் கீழ் மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்தில் திருவதிகை ஆயில்மில் பேருந்து நிறுத்தம் அருகில், 9 மீட்டர் உயரத்திற்கு மினி உயர்மின் கோபுரவிளக்கு 6 எண்ணிக்கை கொண்ட 100 வாட்ஸ் LED விளக்கு அமைத்தல் பணி மேற்கொள்ள ந.க.எண்.அ3/5262/21 நாள்.07.03.2022 தேதிய கடிதத்தில் கீழ்கண்ட பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரு.இலட்சத்தில்) |
|---|---|---|
| பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-22 | | |
| 1 | பண்ணுருட்டி நகராட்சி திருவதிகை ஆயில்மில் பேருந்து நிறுத்தம் அருகில், 9 மீ மினி உயர்மின் கோபுரவிளக்கு 6 எண்ணிக்கை கொண்ட 100 வாட்ஸ் LED விளக்கு அமைத்தல் பணி. | 4.50 |

**அலுவலக குறிப்பு:-** மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.70/இ2/2022)

9. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வரையுள்ள பொது மக்களுக்கு பல்வேறு கொள்ளளவுள்ள 18 எண்ணிக்கைகள் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மூலம் குடிநீர் ஏற்றப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு

வருகிறது. மேற்கண்ட குடிநீர் அத்தியாவசிய பணிக்கு போதிய பணியாளர்கள் இல்லாததால், இந்நகராட்சி மூலம் காலை மற்றும் மாலை இருவேளை குடிநீர் விநியோகம் செய்ய சிரமம் ஏற்படுகிறது. எனவே பொதுமக்களின் குடிநீர் அத்தியாவசியம் கருதி வெளிகொணர்வு முகமை மூலம் ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் மேற்கொண்டு வரும் பணி மார்ச் 2022 உடன் முடிவடைகிறது. எனவே பொது மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் திரவகுளோரினுடன் கலந்து வழங்க வெளிகொணர்வு முகமை மூலம் மனித சக்திகளை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயிக்கப்பட்ட விலையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.90/- இலட்சத்திற்கு (ரூபாய் ஒன்பது லட்சத்தி தொந்நூறு ஆயிரம் மட்டும்) மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- 1.**மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட பணிகளுக்கான செலவினத்தை குடிநீர் திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.585/2022/இ2**

இடம் – பண்ணுருட்டி நகராட்சி
நாள் – 14.03.2022

நகரமன்ற தலைவர்,
பண்ணுருட்டி நகராட்சி.

<u>**நகரமன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் பொருள்**</u>

கொரானா காலங்களில் கூட சிறப்பாக அரசை வழி நடத்தி அனைத்து தரப்பு மக்களுக்கும் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குதிகளை நிறைவேற்றியும் ஒட்டுமொத்த தமிழக மக்கள் மனங்களையும் கவர்ந்து 2022–ம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் தலைமையில் அனைத்து மாநகராட்சிகள் , நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளை கைபற்றி அமோக வெற்றி பெற்றதற்கு மாண்புமிகு **தமிழக முதல்வர்** அவர்களுக்கு பண்ணுருட்டி நகரமன்றம் சார்பில் நன்றி கலந்த வணக்கத்தையும், பாராட்டுகளையும் தெரிவித்து கொள்ளப்படுகிறது.

நகரமன்ற தலைவர்,
பண்ணுருட்டி நகராட்சி.